**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**
**மதுரை-625 021**



கடித எண்.105/வ.அ./பொ.து/2021 **நாள்: 08.02.2021**

## <u>பொது ஏல அறிவிப்பு</u>

மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் பொறியியல்துறை அலுவலகத்தின் திறந்தவெளிக் கிட்டங்கியில் (Engineering Department Open Yard) பல்கலைக்கழகத்தின் பலதுறைகளிலிருந்து நிராகரிக்கப்பட்ட உடைந்துபோன, உபயோகமற்ற இரும்புச் சாமான்கள், மரச்சாமான்கள், பிளாஸ்டிக் சாமான்கள், பழுதடைந்த குழல் விளக்குகள், பழுதடைந்த உபயோகமற்ற மின்சாதனப்பொருட்கள் மற்றும் கழிக்கப்பட்ட இலகுரக வாகனங்கள் (Condemned Scrap Materials, Iron and Steel Materials, Wooden Articles, Plastic Materials, Condemned Electrical Items and Condemned Vehicles) உள்ளது உள்ள நிலையிலுள்ளபடி வருகின்ற **<u>26.02.2021</u> (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணியளவில்** பொது ஏலம் விடப்படும்.

பதிவாளர்(பொ)

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**

**மதுரை-625 021**

கடித எண்:105/பொ.து(க)/2021 நாள்:08.02.2021

<u>**பொது ஏல அறிவிப்பு**</u>

மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் பொறியியல்துறை அலுவலகத்தின் திறந்தவெளிக் கிட்டங்கியில் (Engineering Department open yard) பல்கலைக்கழகத்தின் பலதுறைகளிலிருந்து நிராகரிக்கப்பட்ட உடைந்துபோன, உபயோகமற்ற பொருட்கள் (Condemned Scrap Materials) மற்றும் கழிக்கப்பட்ட வாகனங்கள்(Condemned Vehicles) ஆகியவற்றை உள்ளது உள்ள நிலையிலுள்ளபடி **வருகின்ற 26.02.2021 காலை 11.00 மணிக்கு டாக்டர்.மு.வ.அரங்கில்** பகிரங்க பொது ஏலம் விடப்படும். **விடுமுறை நாளாக இருப்பின் அதற்குப்பின் வரும் அடுத்தவேலை நாளில் ஏலம் விடப்படும்.**

வாகனங்கள் அல்லாத மற்ற பொருட்களை ஏலம் எடுக்க விரும்புவோர் முன்வைப்புத்தொகையாக (EMD) ரூ.1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)ம், வாகனங்களை ஏலம் எடுக்க விரும்புவோர், ஏலம் எடுக்கும் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக முன்வைப்புத்தொகையாக (EMD) இலகுரக ஊர்தி (Van & Car) ஒன்றுக்கு ரூ.10,000/-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) The Registrar, Madurai Kamaraj University, Madurai -21 என்ற பெயரில் மதுரையில் மாற்றத்தக்க வகையில் ஏதேனும் ஓர் அரசு வங்கியின் கேட்பு வரைவோலை (Demand Draft only) மற்றும் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட விலைப்புள்ளி படிவத்துடன் GST & PAN சான்றிதழ் நகலையும் இணைத்து ஏலம் நடைபெறும் **26.02.2021(வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்குள் மூடி முத்திரையிடப்பட்ட உறையை பதிவாளர் அலுவலகத்தில் சமா்ப்பிக்கப்பட வேண்டும்.** காலம் தவறி வரும் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**கழிக்கப்பட்ட உபயோகமற்ற பொருட்களுக்குண்டான** (Condemned Scrap Materials) ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள் விலைப்புள்ளி படிவத்தின் கட்டணமாக ரூ.1,000/- மற்றும் அதற்குரிய GST கட்டணமாக விலைப்புள்ளியின் கட்டணமான ரூ.1000யில் 18 விழுக்காடு தொகை சேர்த்து மொத்தம் **ரூ.1,180/-(ரூபாய் ஆயிரத்தி நூற்றி என்பது மட்டும்)** மேலும் **கழிக்கப்பட்ட வாகன ஏலத்தில்** (Condemned Vehicles) கலந்துக்கொள்ளும் நபர்கள் விலைப்புள்ளி படிவத்தின் கட்டணமாக ரூ.250/- மற்றும் அதற்குரிய GST கட்டணமாக விலைப்புள்ளியின் கட்டணமான ரூ.250யில் 18 விழுக்காடு தொகை சேர்த்து மொத்தம் **ரூ.295/-(ரூபாய் இருநூற்று தொன்னூற்றி ஐந்து மட்டும்) The Registrar, Madurai Kamaraj University, Madurai -21** என்ற பெயரில் மதுரையில் மாற்றத்தக்க வகையில் ஏதேனும் ஓர் அரசு வங்கியின் கேட்பு வரைவோலை (Demand Draft only) மற்றும் அசல் GST & PAN சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும். (எக்காரணத்தை கொண்டும் விலைப்புள்ளி கட்டணத் தொகையும் அதற்குண்டான வரியும் திருப்பித்தரப்படமாட்டாது).

**பல்கலைக்கழக பகிரங்க ஏலமானது 26.02.2021 (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் அனைத்து ஏலதாரரின் முன்னிலையில் நிர்வாகம் நிர்ணயித்த விலையை அடிப்படையாகக்கொண்டு ஏலம் விடப்படும். அதன்பின்பே விலைப்புள்ளிகளின் உறைப் பிரிக்கப்படும். ஏலம் அல்லது விலைப்புள்ளித் தொகை இவற்றில் எது கூடுதலானத்தொகையையோ, அத்தொகையைப் பல்கலைக்கழக நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு இறுதி செய்யப்படும்.**

ஏலம் விடப்படும் பொருட்களைப் பார்க்கவோ மற்றும் ஏல நிபந்தனைகளைத் தெரிந்து கொள்ளவோ விரும்புவோர் **22.02.2021 திங்கட்கிழமை** முதல் அலுவலக நாட்களில் அலுவலக நேரமான காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை பொறியியல்துறை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**எவ்விதக் காரணமின்றி ஏலத்தை ரத்து செய்யவோ, மறுஏலம் விடவோ அல்லது ஏலம் விட்டபின்பு ஏலத்தை நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.**

பல்கலைநகர்,
பதிவாளர்(பொ)
நாள்:08.02.2021

## பொது ஏல நிபந்தனைகள்

1. **கழிக்கப்பட்ட உபயோகமற்ற பொருட்களுக்குண்டான** (Condemned Scrap Materials) ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள் விலைப்புள்ளி படிவத்தின் கட்டணமாக ரூ.1,000/- மற்றும் அதற்குரிய GST கட்டணமாக விலைப்புள்ளியின் கட்டணமான ரூ.1000யில் 18 விழுக்காடு தொகை சேர்த்து மொத்தம் **ரூ.1,180/- (ரூபாய் ஆயிரத்தி நூற்றி என்பது மட்டும்)** மேலும் **கழிக்கப்பட்ட வாகன ஏலத்தில்** (Condemned Vehicles) கலந்துகொள்ளும் நபர்கள் விலைப்புள்ளி படிவத்தின் கட்டணமாக ரூ.250/- மற்றும் அதற்குரிய GST கட்டணமாக விலைப்புள்ளியின் கட்டணமான ரூ.250யில் 18 விழுக்காடு தொகை சேர்த்து மொத்தம் **ரூ.295/-(ரூபாய் இருநூற்று தொன்னூற்றி ஐந்து மட்டும்) The Registrar, Madurai Kamaraj University, Madurai -21** என்ற பெயரில் மதுரையில் மாற்றத்தக்க வகையில் ஏதேனும் ஓர் அரசு வங்கியின் கேட்பு வரைவோலை (Demand Draft) சமர்ப்பிக்கப்பட வேண்டும் (எக்காரணத்தை கொண்டும் விலைப்புள்ளி கட்டணத் தொகையும் அதற்குண்டான வரியும் திருப்பித்தரப்படமாட்டாது).

2. வாகனங்கள் அல்லாத மற்ற பொருட்களை ஏலம் எடுக்க விரும்புவோர் முன்வைப்புத்தொகையாக (EMD) ரூ.1,00,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)ம், வாகனங்களை ஏலம் எடுக்க விரும்புவோர், ஏலம் எடுக்கும் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக முன்வைப்புத்தொகையாக (EMD)இலகுரக ஊர்தி (Van & Car) ஒன்றுக்கு ரூ.10,000/-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). The Registrar, Madurai Kamaraj University, Madurai -21 என்ற பெயரில் மதுரையில் மாற்றத்தக்க வகையில் ஏதேனும் ஓர் அரசு வங்கியின் கேட்பு வரைவோலை (Demand Draft only) மற்றும் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட விலைப்புள்ளி படிவத்துடன் GST & PAN சான்றிதழ் நகலையும் இணைத்து ஏலம் நடைபெறும் **26.02.2021 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்குள் மூடி முத்திரையிடப்பட்ட உறையை பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** காலம் தவறி வரும் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. விலைப்புள்ளிப்படிவத்தில் ஏலதாரர்கள் பொருட்களின் விலையை எண்ணாலும், எழுத்தாலும் (Rate in Figures & Words) குறிப்பிட வேண்டும். விலைப்புள்ளி உறையில் ஏலதாரரின் முகவரியையும், கைப்பேசி/தொலைபேசி எண்களை கண்டிப்பாக குறிக்கவேண்டும்.

4. விலைப்புள்ளி படிவத்துடன் முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (Demand Draft), GST & PAN சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விலைப்புள்ளி நிராகரிக்கப்படுவதுடன் ஏலத்தில் கலந்து கொள்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது.

5. பகிரங்க ஏலமானது **26.02.2021 வெள்ளிக்கிழமை காலை 11.00** மணியளவில் அனைத்து ஏலதாரரின் முன்னிலையில் நிர்வாகம் நிர்ணயித்த விலையிலிருந்து ஏலம் விடப்படும். அதன்பின்பே விலைப்புள்ளி உறையை பிரிக்கப்படும். ஏலம் அல்லது விலைப்புள்ளி தொகை இவற்றில் எது கூடுதலானத்தொகையோ, அத்தொகையை பல்கலைக்கழக நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு இறுதி செய்யப்படும்.

6. ஏலத்தில் ஏலதாரர் அல்லது ஏலதாரரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் உரிய அனுமதி கடிதத்துடன் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படும்.

7. ஏலம் முடிந்தவுடன் அதிகபட்சத் தொகையின் ஏலதாரரின் கேட்புவரைவோலை மற்றும் இரண்டாம் ஏலதாரரின் கேட்புவரைவோலையினை மட்டும் நிறுத்தி வைத்துக்கொண்டு மற்றவர்களின் கேட்பு வரைவோலைகளை உடனடியாக திருப்பித் தரப்படும்.

8. ஏலத்தில் அதிகபட்சத் தொகையின் ஏலதாரர், ஏலம் விடப்படும் பொருட்களுக்கு ஏலத்தொகையின் 50% தொகையை ஏலம் முடிந்தவுடன் ரொக்கமாகவோ அல்லது ஏலதாரரின் பெயரில் வங்கியில் செலுத்திய கேட்பு வரைவோலையாகவோ செலுத்த வேண்டும். (வேறு நபர்களின் பெயரில் எடுத்துள்ள கேட்புவரைவோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் தங்களது ஏலம் நிராகரிக்கப்படுவதுடன், முன்வைப்புத்தொகையும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(த.பி.பா)

9. அதிகபட்சத் தொகை ஏலதாரரின் முன்வைப்புத்தொகையினை ஏலப்பொருட்களை இறுதியாக எடுத்துச்செல்லும்பொழுது ஏலத்தொகையில் ஈடு செய்யப்படும்.

10. ஏலம் அங்கீகரிப்பட்ட பின்பு ஏலத்தொகையின் பாக்கித் தொகையினை ஒரு வார காலத்திற்குள் பல்கலைநகர் பாரத வங்கியின் கணக்கு எண்-1லும் மற்றும் ஏலத்தொகைக்கான அரசு மத்திய, மாநில அரசு வரி (GST) -----% யினையும், வருமானவரி மற்றும் ஏதேனும் அரசுக்கு வரிகள் செலுத்த வேண்டியிருந்தால் ஏலதாரர் செலுத்தவேண்டும்.

11. ஏலப்பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு வரும் வாகனங்களை ஏலதாரர் தமது சொந்தப் பொறுப்பில் சாமான்களை ஏற்றி இறக்குதலை செய்துகொள்ளவேண்டும்.

12. அதிகபட்சத் தொகையின் ஏலதாரர் ஏலத்தொகையினைச் செலுத்திய பின்பு ஏலப்பொருட்களை அலுவலக நாட்களின் மூன்று நாட்களுக்குள் காலை 10-00 மணியிலிருந்து மாலை 5-00 மணிக்குள் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படும். மற்ற நேரங்களில் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

13. ஏலதாரர் அவ்வாறு மூன்று நாட்களுக்குள் பொருட்களை எடுப்பதற்கு தவறும் பட்சத்தில் கால தாமதமாகும் ஒவ்வொரு நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு தரை வாடகையாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் செலுத்திய பிறகே பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

14. ஏலம் விடப்படும் பொருட்களைப் பார்க்க விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலக நேரமான காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை பொறியியல்துறை அலுவலகத்தில் அனுமதி பெற்றுப் பொருட்களைப் பார்வையிடலாம்.

**15. எவ்விதக் காரணமின்றி ஏலத்தை ரத்து செய்யவோ, மறு ஏலம் விடவோ அல்லது ஏலம் விட்டபின்பு ஏலத்தை நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.**

பதிவாளர்(பொ)